# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## June 22, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 12-ஆவது சர்வதேச யோகா தினம், இந்தியா உள்பட உலகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 21) உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

(i) சர்வதேச யோகா தினம், இப்போது உலகின் மிகப் பெரிய சமூக கொண்டாட்டமாக மாறிவிட்டது. உலகின் பல்வேறு நாடுகள் மற்றும் கலாசாரங்களைக் கடந்து, மக்களை ஒன்றிணைக்கிறது யோகா. 'பூமியின் மிக நீண்ட நாள்' என்ற சிறப்புக் குரிய ஜூன் 21-ஆம் தேதி, இப்போது உலகின் மிகப் பெரிய சமூக கொண்டாட்ட நாளாகவும் உருவெடுத்துள்ளது. இந்தத் தருணத்தில், உலக மக்களுக்கு எனது வாழ்த் துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் பிரதமர் மோடி.

2. திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை அருகே தனியார் மீன் உணவு ஏற்றுமதி தொழிற்சாலையில் ஏற்பட்ட அமோனியா வாயுக் கசிவு காரணமாக வடமாநில பெண் தொழிலாளர்கள் 2 பேர் உயிரிழந்தனர்; 62 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு, மருத்துவமனைகளில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். இவர்களில் 25-க்கும் மேற்பட்டோர் கவலைக்கிடமாக உள்ளதால், உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக் கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

(i) கன்னிகைப்பேர் கிராமத்தில் உள்ள இந்த தொழிற்சாலையில் ஒடிஸா, ஜார்கண்ட் மற்றும் அஸ்ஸாம் மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் சுமார் 230 பேர் பணிபுரிகின்றனர். ஞாயிற்றுக்கிழமை 100 பேர் பணியில் இருந்தனர். விடுமுறை நாள் என்பதால், எஞ்சிய 100-க்கும் மேற்பட்டோர் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள அறைகளில் இருந்தனர். அப்போது, அறையின் ஓரத்தில் இருந்த அமோனியா வாயு தொட்டிசரியாக மூடப்படாத நிலையில், வாயுக் கசிவு ஏற்பட்டு தீப் பிடித்தது.

(ii) இதில் 60 பெண் தொழிலாளர்கள் உள்பட 65 பேருக்கும் மேற்பட்டோருக்கு திடீரென காது வழியாக ரத்தக் கசிவு ஏற்பட்டது. உடலில் சிறு கொப்புளங்கள் ஏற்பட்டன.

3. மேகாலய மாநிலத்தின் பலபகுதிகளிலும் கனமழை பதிவாகியுள்ளது. கிழக்கு காசி ஹில்ஸ் மாவட்டத்தில் உள்ள மாவ்சின்ராம் பகுதியில் 24 மணி நேரத் தில் 530 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது ஜோத்பூர் அல்லது பிகானேர் போன்ற நகரங்களில் 6 மாத கால அளவில் பதிவாகும் மழைக்கு சமமானது என வானிலை நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

4. ஜம்மு-காஷ்மீரின் கந்தர்பால் மாவட்டத்தில் உள்ள பிரசித்தி பெற்ற கீர் பவானி கோயில் திருவிழா மற்றும் அமர்நாத் யாத்திரை தொடங்குவதையொட்டி, அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(i) கந்தர்பால் மாவட்டத்தின் துல்முல்லா பகுதியில் காஷ்மீர் பண்டிட்களின் முக்கிய வழிபாட்டுத் தலமான கீர் பவானி கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் வருடாந்திர திருவிழா திங்கள்கிழமை நடைபெறவுள்ளது. ஏராளமான பக்தர்கள் வருகை தருவர் என்பதால் கோயில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக காவல் துறை செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

(ii) ஜம்மு-காஷ்மீரில் இமயமலையில் 3,880 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள அமர்நாத் குகையில் இயற்கையாக உருவாகும் பனி லிங்கத்தை தரிசிக்க ஆண்டுதோறும் பக்தர்கள் யாத்திரை மேற்கொள்வது வழக்கம். அனந்த்நாக் மாவட்டத்தில் உள்ள பஹல்காம், கந்தர்பால் மாவட்டத்தில் உள்ள பால்டால் ஆகிய இரு வழித்தடங்களில் இந்த யாத்திரை மேற்கொள்ளப்படும். நடப்பாண்டு ஜூலை 3-ஆம் தேதி தொடங்கி 57 நாள்கள் நடைபெறவுள்ளது.

5. இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நிகழாண்டு டிசம்பரில் கையொப்பமாகும் என மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

(i) இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான பிரம்மாண்ட வர்த்தக ஒப்பந்தத்தை நிகழாண்டு ஜனவரி 27-ஆம் தேதி இருதரப்பும் இறுதிசெய்தன.

(ii) உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதம் மட்டுமின்றி உலகளாவிய வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பங்கை பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி உள்ளிட்ட 27 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய யூனியனும் இந்தியாவும் கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தால் இந்தியப் பொருள்களை 27 நாடுகளுக்கு வரியின்றி ஏற்றுமதி செய்ய முடியும்.

(iii) அதேசமயத்தில் ஐரோப்பிய யூனியன் நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் விலை உயர்ந்த கார்கள் உள்ளிட்ட பொருள்களின் விலை வெகுவாக குறையும்

(iv) இதுதொடர்பாக மும்பையில் செய்தியாளர்கள் ஞாயிற்றுக்கிழமை எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த பியூஷ் கோயல், 'ஐரோப்பிய யூனியனுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் டி.சம்பர் மாதம் கையொப்பமாகும். ஒப்பந்தத்தின் அம்சங்கள் 2027 பிப்ரவரி-மார்ச் மாதங்களில் அமலாகும். இந்த ஒப்பந்தம் மூலம் எந்த வரியுமின்றி ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதியை மேற்கொள்ள முடியும்.

(v) அமெரிக்க குழு இன்று வருகை:

- இந்தியா-அமெரிக்கா இடையேயான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஜேமிசன் கிரீர் தலைமையிலான குழு திங்கள்கிழமை (ஜூன் 22) இந்தியா வருகிறது. அண்மையில் கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டில் இந்த ஒப்பந்தத்துக்கான நடைமுறைகளை விரைவுபடுத்துவது குறித்து பிரதமர் நரேந்திர மோடியும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பும் ஆலோசனை நடத்தினர். தற்போது உலகமே இந்தியாவை உற்றுநோக்கியுள்ளது' என்றார்.
- முன்னதாக, இம்மாத தொடக்கத்தில் இந்தியா-அமெரிக்கா இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை தில்லியில் நடைபெற்றது.இதில் இந்திய தரப்பில் வர்த்தக துறை கூடுதல் செயலர் தர்ப்பண் ஜெயின் தலைமையிலான குழுவினரும், அமெரிக்க தரப்பில் தலைமை அதிகாரி பிரெண்டன்லின்ச் தலைமையிலான குழுவினரும் பங்கேற்றனர். இதைத் தொடர்ந்து தற்போது அடுத்தகட்ட பேச்சுவார்த்ததை நடைபெறவுள்ளது.

6.இந்தியா முழுவதும் 12-ஆவது சர்வதேச யோகா தினம் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 21) கோலாகலமாக கொண்டாடப்பட்டது. நிகழாண்டு 'ஆரோக்கியமான முதுமைக்கான யோகா' என்ற கருப்பொருளில் இத்தினம் கொண்டாடப்பட்டது.

(i) உலகம் முழுவதும் ஆயிரக்கணக்கானோர் சர்வதேச யோகா தினத்தை ஞாயிற்றுக்கிழமை கொண்டாடிய நிலையில், ஆரோக்கியமான வாழ்க்கைக்கு யோகாவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டன.

7. இந்திய கடற்படைக்காக உள்நாட்டிலேயே கட்டமைக்கப்பட்ட 3 அதிநவீன கடற்படை கப்பல்களை பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

(i) கொல்கத்தாவை சேர்ந்த பொதுத் துறை நிறுவனமான கார்டன் ரீச் கப்பல் கட்டமைப்பு மற்றும் என்ஜீனியர்ஸ் நிறுவனத்தால், ஐஎன்எஸ் அக்ரோய், ஐஎன்எஸ் துனாகிரி (இரண்டும் போர்க்கப்பல்கள்), ஐஎன்எஸ் சன்ஷோதக் (ஆய்வுக் கப்பல்) ஆகிய மூன்று கப்பல்கள் கடற்படைக்கு கட்டமைக்கப்பட்டன. இவை, இந்திய கடற்படையின் போர்க்கப்பல் வடிவமைப்பு பணியகத்தால் வடிவமைக்கப்பட்டவையாகும். 75 சதவீத உள்நாட்டுப் பொருள்கள் மூலமே இந்த கப்பல்கள் கட்டப்பட்டுள்ளன.

(ii) இந்த 3 கடற்படை கப்பல்களையும் நாட்டுக்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி கொல்கத்தாவில் உள்ள சியாமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு 3 கப்பல்களையும் நாட்டுக்கு அர்ப்பணித்தார்.

(iii) பிரதமர் மோடியால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்ட 3 கப்பல்களில் ஐஎன்எஸ் துனாகிரி கப்பல், எதிரி நாடுகளின் ரேடார்களின் கண்களில் படாமல் மறைந்து பயணிக்கும் திறன் கொண்டது. இதில் அதிவேக சூப்பர்சோனிக் பிரமோஸ் ஏவுகணைகள், வான்பாதுகாப்பு ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன. ஐஎன்எஸ் அக்ரோய் கப்பல், நீர்மூழ்கி எதிர்ப்பு கப்பல் ஆகும். எதிரி நாடுகளின் நீர்மூழ்கிகளை கண்டுபிடித்து தகர்க்கும் சக்தி கொண்டது. இதேபோல், ஐஎன்எஸ் சன்ஷோதக், ஆய்வு கப்பலாகும். உலகின் 4-ஆவது பெரிய ஆய்வு கப்பலாக கூறப்படும் இக்கப்பல், கடற்பகுதி மற்றும் கடலோர பகுதியில் உள்ள நிலபரப்புகளை துல்லியமாக வரைபடமாக தயாரிக்க உதவும்.